# திருக்கோணமாமலை

குல. சபாநாதன்

M. SATKUNAM. B.A. (HONS)



திரிகோணமலையில் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட மூன்று விக்கிரகங்களைப் படத்திற் காண்க.

# திருக்கோணமாமலை

## தோற்றுவாய்

இலங்கையின் சிறந்த அரணாக விளங்குவது திரிகோணமலை. எனவே இலங்கையைப் பிடிக்கும் நோக்கமாக வந்த போர்த்துக்கீசர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதன்முதற் கால்வைத்த இடமும் திரிகோணமலையேதான். கடந்த மகாயுத்தத்திலும் திரிகோணமலை கடற்படை கொண்ட பேர் பெற்ற துறைமுகமாக விளங்கிப் பேருதவி புரிந்து வந்தமை உலகறிந்த விஷயம். இலங்கையிலே தமிழர்கள் முதன்முதலாகக் குடியேறிய பிரதேசம் திரிகோணமலைப்பகுதியாக விருத்தல் கூடுமெனச் சரித்திராசிரியர் ஒருவர் கருதுகின்றார். கிழக்கு மாகாணத்திலுள்ள இடப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருத்தலும் இக்கொள்கையினை வலியுறுத்தும்.

## வரலாற்று நூல்கள்

இங்ஙனம் தமிழர் நாகரீகம் பரவியிருந்த பிரதேசத்தில் அதன் நடுநாயகமாக ஒரு சைவ நகரம் (கோயில்) இருந்திருத்தல் இயல்புதான். புராதனப் பெருமை வாய்ந்த இப்புனித ஸ்தலத்தின் வரலாறு முழுவதும் கிடைக்கப் பெறாமை தமிழர்தம் தவக்குறைவென்றே சொல்லலாம். இதன் பண்டை வரலாறு காலத்திரையினால் மூடப்பட்டுக் கிடக்கின்றது. தக்ஷிணகைலாய புராணம், திரிகோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு முதலிய நூல்களிற் சிற்சில சம்பவங்கள் மட்டுமே ஆங்காங்கு மிளிர்கின்றன. திருக்கோணமலையிற் சிறந்த புலவராய் விளங்கிய ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளையவர்கள் எழுதிவைத்த "திருக்கோணாசல வைபவம்" எனும் பக்திச்சுவை நிறைந்த நூல், இப்பொழுது அப்புலவரின் குமாரர் திரு. அ. அளகைக்கோன் அவர்களின் முயற்சியால் வெளிவந்திருப்பதுகண்டு மகிழ்ச்சியுறுகிறேன். புலவர் அவர்கள் பல புராணங்களிலும் காணப்படும் ஐதிகங்களை அதிக சிரமமெடுத்துத் தொகுத்து நூலுருவாக அமைத்துள்ளார். இப்பெரும் பணிக்காகச் சைவ உலகம் புலவர் அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது.

## பெயர்க் காரணம்

திருக்கோணமலை யெனும் பெயர் மும்மலைகள் சூழ முக்கோண வடிவினதாயிருந்ததால் ஏற்பட்ட பெயர் என்பர் ஒரு சாரார். கோணேசுவரர் எழுந்தருளப்பெற்ற மலையாதலின், இத்தலம் திருக்கோணேஸ்வரம், திருக்கோணமலை, திருக்கோணமாமலை, திரிகோணசலம் எனப் பலபட வழங்கப்படலாயிற்றென்பர் மற்றொரு சாரார். சம்பந்த சுவாமிகள் 'கோணமாமலை' யென்றே பாடியருளியுள்ளார். அருணகிரிநாதர் இத்தலத்தைத் திருக்கொணமலை யென அமைத்தே பாடியுள்ளார். இதன் பூர்வீக நாமம் திருக்கோகர்ணமா யிருத்தல் கூடுமென ஒரு நவீன ஆராய்ச்சி அண்மையிற் கிளம்பியது. ஆனால் இது தக்க சான்றுகளுடன் நிரூபிக்கப்படவில்லை.


## வழிபட்டோர்

இராவணன் இத்தலத்தில் வழிபட்டான் எனப் புராணங்கள் கூறுகின்றன. சோமநாட்டரசனாகிய வராரமவேதவன் திரிகோணமலைச் சிகரத்திற் கோணேசருக்குக் கோயில் எடுத்தான் எனவும், இவனுடைய மகன் குளக்கோட்டன் இத்திருப்பணியை நிறைவேற்றி, இலங்கை அரசகுமாரியாகிய ஆடகசவுந்தரியை மணமுடித்து வாழ்ந்து, ஈற்றிற் சோதியிற் கலந்தான் எனவும் தக்ஷிணகைலாச புராணம் கூறுகின்றது. கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் இக்கோயிற் பூசை ஒழுங்காக நடைபெறுதற்கு வேண்டிய பூசகர்களை அமர்த்திக் கோயிலையும் திருத்தியமைத்தான் எனக் கோணேசர் கல்வெட்டு கூறுகின்றது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சம்பந்த சுவாமிகள் காலத்தில் இவ்வாலயம் சிறந்த நிலைமையிலிருந்தமையால், "கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே" எனப் பாடியுள்ளார். பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தவனாகிய புவனேக வீரபாண்டியன் கோணமலையில் தன் இருகயலெழுதி, கோயிலுக்குரிய நிலங்களை இறையிலி நிலமாக்கினான் என்ற வரலாறு குடுமியாமலைச் சாசனத்திற் கூறப்பட்டுள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் அருணகிரிநாதரும் கோணேசருக்குத் திருப்புகழ்ப் பாமாலை சூட்டியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து அரசுபுரிந்த ஆரியச் சக்கரவர்த்திகளும் இக்கோயிலை ஆதரித்து வந்தனர்.

## கோயிலை இடித்துக் கோட்டை கட்டல்

கி. பி. 1627 வரை இலங்கையிற் போர்த்துகீசத் தேசாதிபதியாகவிருந்த கொன்ஸ் தாந்தினு தெசா என்பவனே இக்கோயிலை இடித்து, அதன் கற்களைக்

கொண்டு கோட்டையைக் கட்டினன். கோயிலின் சரித்திரம் அமைந்த சாஸனங்கள் பலவற்றை அழித்தவனும் இவனே. இவ்வரலாற்றினை லிஸ்பனிலுள்ள நூல் நிலையத்திலிருந்து பிரதி செய்து விரிவாக எழுதியிருக்கிருர் லெவ்ரினன்ற் கேணல் ஜி. பி. தொமாஸ் அவர்கள், "திரிகோணமலைச் சரித்திரம்" என்ற நூலில். இக் கோயில் அழிக்கப்பட்ட சம்பவம் ஏற்கெனவே ஒரு வெண்பாவிற் கூறப்பட்டிருந்ததை முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் தாம் எழுதிய "புராதன யாழ்ப்பாணம்" எனும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். போர்த்துக்கேசர் இக் கோயிலை இடிப்பதற்கு முன்னர் ஆயிரங்கால் மண்டபமும் அழகிய வீதியும் அமையப்பெற்ற படமொன்றை வரைந்து எடுத்துச் சென்றனர். இது நம் திருவருட் செயலென்றே குறிப்பிட வேண்டும்.



**திரிகோணசலம்**—சைவர்கள் கோயில் வழிபாட்டிற் கலந்துகொள்ள வந்திருக்கின்றனர்.

## விக்கிரகங்கள் மறைதல்

கோயில் இடிக்கப்பட்டதும் அங்கிருந்த விக்கிரகங்களைப் பூசகர்கள் எடுத்துச் சென்று ஒளித்துவைத்தனர். சிலவற்றை மீண்டும் தம்பலகாமத்தில் வைத்து வழிபட்டு வந்தனர். கோயில் இடிக்கப்பெற்றபோதிலும் சைவ நன்மக்கள் திரிகோணமலைக் கோட்டைக்குள் கோயில் இருந்ததாகக் கருதப்பட்ட இடத்திற்குப் பூசை செய்துவரும் வழக்கத்தைக் கைவிடவில்லை. அநேக இடையூறுகள் நேர்ந்தும் இவ்வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## புனருத்தாரண முயற்சி—டக்டர் பாலேந்திரா அவர்கள்

பழைய இடத்தில் மீண்டும் ஒரு ஆலயம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் சைவமக்களிடையே அடிக்கடி எழுந்தது. இதனுற் பல முயற்சிகள் தோன்றி மறைந்தன. 1939-ம் ஆண்டில் டக்டர் டபிள்யூ. பாலேந்திரா அவர்கள் இக்கோயிலை மீண்டும் கட்ட வேண்டுமென்ற ஆசையுடன் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதித் தலைவராகிய திரு. லோங்கேஸ்ற் மூலம் கட்டடப் படம் ஒன்று தயாரித்து ஆவன செய்து வந்தார். ஆனுல் அம்முயற்சியும் நிறைவேறவில்லை. யுத்த காலத்திற் கோணேசர் மலையிற் கட்டடம் அமைக்க அத்திவாரம் வெட்டியபொழுது அம்மன் விஷ்ணு சிலா விக்கிரகங்கள் வெளிக்கிளம்பின. பின்னர் சமீபத்தில் ஒரு சிறு மண்டபம் திரிகோணமலையிலுள்ள தருமசிந்தையுள்ள ஒரு செல்வராற் கட்டப்பெற்றுள்ளது. கடந்த சித்திரை மாதத்தில் இக்கோயிலை மீட்டும் கட்ட வேண்டுமென்ற எண்ணம் டக்டர் பாலேந்திரா அவர்களுக்கு உதயமாயிற்று. இது திருவருட் செயலென்றே அவர் கருதுகிருர். ஆடி மாதத்தில் திரிகோணமலையில் ஒரு பொதுக் கூட்டத்திற் பன்னிருவரைக் கொண்ட ஒரு நிர்வாகசபை இக்கோயிலைக் கட்டுவதற்கு முயற்சிசெய்வதற்காக நியமிக்கப்பட்டது. திரிகோணமலைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. எஸ். சிவபாலன் இவ்விஷயத்தில் அதிக ஊக்கமெடுத்தார். திரு. டி. இராஜரத்தினம், திரு. என். இராஜவரோதயன், திரு. எஸ். எம். மாணிக்கராஜா, திரு. எஸ். சிவபாலன், திரு. ரி. சுப்பிரமணியம், டக்டர். டபிள்யூ. பாலேந்திரா, திரு. சி. ஆறுமுகம், திரு. கே. சரவணமுத்து, திரு .வி. இராமலிங்கம், திரு. ரி. ஏகாம்பரம், பிரம்ம ஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள், பிரம்ம ஸ்ரீ சபாபதி ஐயர் எனும் பன்னிருவர் கொண்ட நிர்வாகசபைக்குத் தலைவராகத் திரு. எஸ். சிவபாலன் தெரிந்தெடுக்கப்பட்டார். இக்கோயிலில் எந்த விக்கிரகங்களை வைப்பது என்ற

பிரச்னை எழுந்தபொழுது என்ன செய்யலாம் என்பதை டக்டர். பாலேந்திரா திட்டமாகச் சொல்ல முடியாதிருந்தார்.

## சபையின் கவலை

திருக்கோணேசர் ஆலயத் திருப்பணியைத் தொடங்கச் சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது மூன்று தாம்பர விக்கிரகங்கள் ஆடி மாதத்தில் வெளிக்கிளம்பியசெய்திபத்திரிகைகளில்வெளிவந்தது. திருக்கோணமலையில் ஒரு கிணற்றிலிருந்து இவை எடுக்கப்பட்டன. கோணேநாதரின் திருவருள் இருந்தவாறென்னே என்னே எனச் சைவ உலகம் போற்றிப் புகழத் தொடங்கியது. சைவமக்களிடையே புத்துணர்ச்சியும் புதுக்கிளர்ச்சியும் புலப்பட்டன. பார்வதி, சிவன், சந்திரசேகரர் ஆகியவர்களைக் குறிக்கும் இம் மூன்று திருவுருவங்களும் எவ்வித பின்னமுமின்றிக் காணப்பட்டன. இத்திருவுருவங்கள் எழுந்தருளியநகரசபைக் காரியாலயமே ஒரு கோயிலாக மாறிவிட்டது.

இலங்கைத் தேசிய நூதனசாலையின் தற்காலிக அதிபர் திரு. எம். டி. ராகவன் அவர்கள் இந்த விக்கிரகங்களைப்பற்றிக் கூறும் அபிப்பிராயம் பின்வருமாறு :—

இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்கள் முறையே சிவன் (சந்திரசேகரமூர்த்தம்), சிவன் (சுகாசன மூர்த்தம்), பார்வதி ஆகிய விக்கிரகங்களாகும். நடுவிலுள்ள விக்கிரகத்தை முதலில் அவதானிப்பாம்.

### சிவன் (சுகாசன மூர்த்தம்)

ஒரு பாதத்தைக் கீழே தொங்கவிட்டும் ஒரு பாதத்தை மடக்கிக்கொண்டும் சுகாசனத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் சிவனைக் குறிப்பதாகும். ஸ்கந்தரை மத்தியில் உடையதாய் சிவன் பார்வதி சமேதராய் வீற்றிருப்பதே சோமாஸ்கந்த மூர்த்தமாகும். இங்கே சிவ விக்கிரகம் மட்டுமே காணப்படுகின்றது. சோமாஸ்கந்த விக்கிரகம் பொலநறுவையிற் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களுட் காணப்பட்டதெனினும் ஸ்கந்த விக்கிரகம் அதிலும் காணப்படவில்லை. ஸ்கந்த அல்லது சுப்பிரமணிய விக்கிரகம் தனிமையாக வார்க்கப்பட்டுச் சிவனுக்கும் பார்வதிக்குமிடையே நிற்கும் பாவனையில் வைக்கப்படுவதே வழக்கம். திரிகோணமலை விக்கிரகங்களிற் சிவ விக்கிரகம் மட்டுமே காணப்படுகிறது. இதனோடு சம்பந்தப்பட்ட பார்வதி ஸ்கந்த விக்கிரகங்கள் இன்னும் வெளிவரவில்லை. இனிமேல் ஒரு சமயம் அவை வெளிவருதல் கூடும்.

### சிவ விக்கிரகம்

இது சிற்பசாத்திர முறைப்படி சிறப்பாக அமைந்துள்ளது. வலது கரம் மழுவையும் இடது கரம்

மானையும் ஏந்தியிருப்பதைக் காணலாம். நான்கு கரங்களுள் எஞ்சிய இரு கரங்களில் வலது கரம் அபயகரமாகவும் இடது கரம் ஆஹூயவரத கரமாகவும் அமைந்துள்ளன. சிவன் அணிந்துள்ள யஜ்ஞோபவீதம் (பூணூல்) இடது தோளிலிருந்து இடுப்புவரை அணியப்பட்டிருப்பதைக் காணலாம். சிவனின் உந்திக்கமலத்துக்கு மேலே அகன்ற உதரபந்தனம் காணப்படுகின்றது. அழகிய வேலைப்பாடமைந்த முகப்பினையுடைய கடிபந்தம் இடையினை அலங்கரிக்கின்றது. சிவனின் வலது காதில் ஆண்களின் காதணியாகிய மகரகுண்டலமும், இடதுகாதில் பெண்களின் அணியாகிய பத்திரகுண்டலமும் காணப்படுகின்றன. சிவன் வேறு, சக்தி வேறுஅல்ல என்பதே சைவர்களின் கொள்கையாகும். அர்த்தநாரீஸ்வர வடிவம் இக்கொள்கையினை வலியுறுத்தும். இந்த சிவ விக்கிரகத்தை 1907-ல் பொலநறுவையிற்கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து சில ஒற்றுமை வேற்றுமைகள் இருத்தலைக் காணலாம். திரிகோணமலை விக்கிரகத்திலுள்ள ஜடாமகுடம், கடிபந்தம், முகப்பு முதலியன முற்றாக வேறுபட்டிருக்கின்றன.

## பார்வதி

திரிகோணமலை பார்வதி விக்கிரகமும் சிறந்த முறையில் அமைந்துள்ளது. வழக்கமாகக் காணப்படும் திரிபங்க வடிவத்தில் அமைந்துள்ளது. சிரசில் கரண்ட மகுடம் அணியப்பெற்றுள்ளது. வலது கரம் நீலோற்பல மொட்டினை ஏந்தியுள்ளது. இடது கரம் கீழே தொங்கவிடப்பட்ட பாவனையில் லோலஹஸ்தம் அமையப்பெற்றதாயுளது. நுட்பமான வேலைப்பாடமைந்த தங்கத் தாலியும் கொடியும் பார்வதியின் கழுத்தினை அலங்கரிக்கின்றன.

வெண்கல விக்கிரகத்தின் காலத்தை நிர்ணயிப்பது இலகுவானதன்று. விக்கிரகங்களின் அமைப்பு முதலியவற்றைக் கொண்டு இவற்றின் காலத்தை ஐந்து பகுதிகளாக வகுத்துள்ளனர் இந்தியச் சிற்ப வடிவ ஆராய்ச்சியாளர். அவையாவன : (1) பல்லவர்காலம் கி.பி. 600 - 800 ; (2) முற்காலச் சோழர்காலம் கி.பி. 800 - 1100 ; (3) பிற்காலச் சோழர்காலம் கி. பி. 1100 - 1300 ; (4) விஜயநகர மன்னர்காலம் கி. பி. 1600 வரை ; (5) தற்காலம் கி. பி. 1600 தொடக்கமுள்ள காலம்.

தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சோழர் காலத்திற்றான் சிற்பவடிவக்கலை உச்சநிலை எய்தியுள்ளதெனக் கூறலாம். தஞ்சாவூரிற் கண்டெடுக்கப்பட்ட அநேக இந்து விக்கிரகங்களையும், தென்னிந்திய ஆலயங்களில் ஸ்தாபிக்கப்பெற்ற விக்கிரகங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்ததின் பயனாக, சோழர்

காலத்து விக்கிரகங்களின் சிறப்பியல்புகளை ஆராய்ச்சியறிஞர்கள் ஓரளவுக்குக் கண்டுபிடித்துள்ளார்கள். இவ்வறிஞர்களின் முடிவுகளையும் சரித்திர முடிவுகளையும் ஆதாரமாகக் கொண்டு ஆராயுமிடத்து, பொலநறுவை வெண்கல விக்கிரகங்கள் சோழர் காலத்தைச் சேர்ந்தவை யென்றும், இலங்கையிற் சோழராதிக்கம் செலுத்திய காலத்தைச் சேர்ந்தவை யென்றும் கருதப்படலாயின. இலங்கையிற் சோழர் ஆதிக்கம் செலுத்திய காலம் கி.பி. 1000 முதல் கி.பி. 1070 வரை எனக் கூறலாம்.

## சிவன் (சந்திரசேகர மூர்த்தம்)

இந்த விக்கிரகத்தை நோக்குமிடத்து, இது பிற்காலச் சோழர்காலத்தைச் சேர்ந்ததெனக் கூற இடமுண்டு. பூணூல் அணிந்திருக்கும் விதம், கடிபந்தம், மான் மழுவின் நிலை, அணிகள், பீடவமைப்பு முதலியன இம்முடிவுக்கு ஆதாரமாக இருப்பதைக் காணலாம். பெரும்பாலும் நிற்கும் திருக்கோலம் உடையதாய், சந்திரனைச் சடையிற் சூடியதாய்க் காணப்படுவது சந்திரசேகர மூர்த்தமாகும்.

இந்த விக்கிரகங்களைப்பற்றிப் புதைபொருளாராய்ச்சி அதிபர் டக்டர் பரணவித்தான கூறும் அபிப்பிராயம் கீழே தரப்பட்டிருக்கிறது :—

(i) சிவன்—தாமரைமலர்ப் பீடத்தில் வீற்றிருக்கும் பாவனையிலுள்ள சந்திரசேகர மூர்த்தம்—உயரம் 1 அடி 11 அங்.

(ii) சிவன்—தாமரைமலர்ப் பீடத்தில் நிற்கும் பாவனையிலுள்ள சந்திரசேகர மூர்த்தம்—உயரம் 1 அடி 3 அங்.

(iii) தாமரைமலர்ப் பீடத்தில் நிற்கும் பாவனையிலுள்ள பார்வதி—உயரம் 1 அடி 5 அங்.

இவை மூன்றும் சிற்பக் கலைத்துறையில் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. இந்தியச் சிற்பக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு கொழும்பு நூதனசாலையிலுள்ள வெண்கல விக்கிரகங்களைப் போலவே இந்த விக்கிரகங்களும் முக்கியத்வம் வாய்ந்தனவாக இருக்கும். இவை கி.பி. 11-வது நூற்றாண்டுக்கும் 13-ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தன எனக் கருத இடமுண்டு என்பதே டக்டர் பரணவித்தான அவர்களின் அபிப்பிராயமாகும்.

## புதிய ஆலயம்

விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டுவிட்டன. இனி இவற்றைப் பிரதிஷ்டை செய்வதற்கான ஆலயம் எப்பொழுது நிறைவேறும் என்ற ஆவலுடன் சைவ உலகம் எதிர்பார்த்த வண்ணமிருக்கிறது. இந்த ஆவலை விரைவிற் பூர்த்திசெய்வது சைவ மக்கள் கடமையாகும். வடக்கே திருக்கேதீச்சரமும், கிழக்கே திருக்கோணேச்சரமும் வானளாவிய கோபுரங்களுடன் திகழும் நன்னாளைக் கண்ணாரக்கண்டு தொழச் சைவ உலகம் ஆசைப்படுகின்றது.

குல. சபாநாதன்.

---

இக்கட்டுரை அரசினர் சமாச்சாரப்பகுதி வெளியீடாகிய "ஸ்ரீ லங்கா" எனும் சஞ்சிகையில் இருந்து அநுமதிக்கப்பட்டது.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்து அருளிய திருக்கோணமலைத் தேவாரப் பதிகம்.

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியாய்
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்து அவற்கு அருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

* * * * 7

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தன புறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடுஉடன் ஆகித்
தன்றுமொண் பௌவம் மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் தலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றம் இலாதார் குறைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழால் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்.

இறைவன் - கோணேச்சுவரர்; இறைவி - மாதுமையாள்.

---

உ

## ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

திருவாய்மலர்ந்து அருளிய

## திருப்புகழ்—திருக்கோணமலை

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியெ
மயலூறி

மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ யுழைத்தேவி டாய்படு
கொடியேனைக்

கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு
மொருவாழ்வே

கதிக்கு நாதனி யுனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை யருட்பார்வை யாகவெ
கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள்
தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ்
தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு
முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கோணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்
வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாளஎம்
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி
பெருமாளே

# ත්‍රිකුණාමලය.

## ප්‍රස්ථාවනාව.

ත්‍රිකුණාමලය ලංකාවේ විශාලම නාවික බල කොටුව ය. එහෙයින්ම මේ දිවයිනට පැමිණි හැම විදේශික ආක්‍රමණිකයෝම—පෘතුගීසිහු, ඕලන්දයෝ, ප්‍රංශයෝ හා ඉංග්‍රීසිහු—පළමුවෙන් පා තැබුවෝ මේ වරායට ය. පසුගිය මහා ලෝකසංග්‍රාමයේදී ද ත්‍රිකුණාමල වරාය විශෙෂ තැනක් ගත් බව ප්‍රකටය. ඇතැම් ඉතිහාසඥයෙක් ලංකාවේ ආදිම ද්‍රවිඩයන් වාසය කෙළේ ත්‍රිකුණාමලය ප්‍රදේශයේ යයි සැක කරති. නැගෙණහිර පළාතේ බොහෝ ග්‍රාම නාම දෙමළයට හැති වීම මේ අදහස තවත් තහවුරු කරයි. මෙසේ ද්‍රවිඩ ශිෂ්ඨාචාරය මුල් බැසගත් මේ ප්‍රදේශයෙහි කෝවිලක් තිබෙන්නට ඇතුවා නිසැක ය. එහෙත් අවාසනාවකට මෙන් මේ සභ්‍යත්වය පිළිබඳ සාක්ෂිත්ව තුඩුදෙන සැහෙන සාක්ෂ්‍යයන් සොයා ගැනීම දුෂ්කරව තිබේ. තවචින කෛලාස පුරාණම්, ත්‍රිකොණමාල පුරාණම්, කොණෙශ්වර කල්වෙට්ටු යනාදි පොත් කීපයකින් මේ පිළිබඳ කරුණු කීපයක් අනාවෘත වේ. "ත්‍රිකුණාමල" නාමයේ සම්භවය ගැණ එක්තරා නිගමණයකට බැසීමට මේ සාහිත්‍යික කරුණු හා ඇතැම් පුරාවිද්‍යාත්මක වස්තූන් ද අප විසින් වහල් කොට ගත හැක.

කඳුගැට තුණකින් වටව ත්‍රිකොණයක හැඩය ඇතිව පිහිටා තිබීම මේ නාමයට මුල්වී යයි ඇතැම්හු කියති. තවත් සමහරෙක් කෝණේශ්වර දෙවිඳුගේ කෝවිලක් මෙහි පිහිටා තුබුණු හෙයින්, ත්‍රිකොණෙශ්වරම්, ත්‍රිකොණමලෛ, ත්‍රිකොණාලම් යනුවෙන් නම් වියයි පවසති. "දෙමළ පුරාණ" අනුව අපට ගත හැකි නිගමණය නම් රාවණ රජතුමා, මේ ස්ථානයෙහි භක්තිමතුන් අතුරෙන් පළමුවැන්නා යනුයි. කොණේශ්වර කල්වෙට්ටු නැමැති ග්‍රන්ථය අනාවෘත කරණු ලබන කරුණු අනුව ගජබා රජ තෙමේ මේ ස්ථානය ප්‍රතිසංස්කරණය කර පූජාසත්කාර පැවැත්වූ බවක් සිතාගත හැක. මේ හැර යාපනය පාලනය

කල "ආයතීචක්‍රවර්ති" රජුන් ද මෙ සිද්ධස්ථානය ගැන සැලකිලිමත් ව පුද සත්කාර පැවැත් වූ බව සිතාගැනීමට හැක. හින්දු භක්තික රජුන් මෙන්ම පොදුජනයාගේ ද ගෞරවයට පාත්‍රව පැවැති මෙ සිද්ධස්ථානය 1627 දී කුස්තන්තීනුද සා තැමැති පෘතුගීසි සෙනෙවියා විසින් විනාශකර බල කොටුවක් තනකලදී. මොහු කෝවිල සම්බන්ධ ව විස්තර අන්තර්ගතවැ පැවැති ශිලා ලිපි, ලේඛන ආදිය ද වැනසූ බව සිතාගත හැක. මේ සම්බන්ධ විස්තරය ලෙප්ටිනන්ට්, කර්-නල් ජී. වී. තෝමස් මහතා ලියූ ත්‍රිකුණාමල ඉතිහාසයේ ද, මුදලියාර් ඇස්. රාසනායගම් මහතාගේ පැරණි යාපණ ඉතිහාසයේ ද සඳහන් වේ.

පෘතුගීසීන් මෙ ස්ථානය විනාශ කරන්නට පෙර මෙහි දහසක් වැඩින් යුත් මාලිගයක්ද, අලඞ්කෘත විථියක් ද වූ බව ඔවුන් විසින් ගෙනයනලද "පිඹුරෙහි" සඳහන්ව තිබේ. ත්‍රිකුණා-



---

ත්‍රිකුණාමලය—සිවන් කෝවිලට වඳනාවට පැමිණි පිරිසෙන් කොටසක් මෙම සිත්තරයෙන්

මලය ද්‍රවිඩ සභ්‍යත්වයෙන් හෙබුණු, සමෘද්ධිමත් පැරණි නගරයක් බැව් මේ කාරණ අපට අනාවෘත කරයි.


මේ අවාසනාවත් සිද්ධිය සිදුවූ කාලයේදී පූජක වරුන් විසින්, මේ ස්ථානයේ තිබුණ ප්‍රතිමා සියල්ල සඟවා තබන ලදී. කෝවිල විනාශ කරණු ලැබූ පසුත් අද දක්වාම භක්තිමතුන් මේ ස්ථානයට නිරතුරුවම යන එන බව අපට පෙණෙන්නට තිබේ.

කෝවිල පෙර පැවති තැනම සිද්ධස්ථානයක් ඉදිකල යුතුයයි එකල සිටි පුරාවිද්‍යා කොමසාරිස් තැන්පත් ලෝංග්හර්ස්ට් මහතාගේ අවවාද අනුව වෛද්‍යාචාර්ය බාලේන්ද්‍ර මහතා ප්‍රථම වරට උත්සාහයක් දැරීය. එම උත්සාහයෙන් පලක් නොවීය.

ලඟදී ත්‍රිකුණාමලයේ ලිඳක තිබී ලෝකඩ පිළිම තුනක් සොයාගන්නා ලදී. එයින් පසු දැන් හින්දු භක්තිකයන් අතර ඒ පිළිබඳ ලොකු උනන්දුවක් ඇතිවී තිබේ. කෝවිලක් ඉදිකිරීමේ අදහසක් ද ඇතිවී තිබේ. මේ සොයාගත් පිළිම තුන සම්බන්ධයෙන් මානවවිද්‍යාඥ M. D. රාඝවන් මහතා මෙසේ කියයි: "ලෝකඩ ප්‍රතිමා කාලය ඉන්දියානු ශිල්ප ක්‍රමය අනුව යුග 5 කට බෙදිය හැක. ප්‍රථම යුගය පල්ලව යුගය යි. (ක්‍රි: ව: 600–800), ද්විතීය යුගය, පූර්ව චෝල යුගය යි. (8 ශතවර්ෂ–11) තුන්වැනි යුගය, අපර චෝල යුගයයි (ශතවර්ෂ 11–13), සිව්වැනි යුගය, විජයනගර කාලය යි (ශතවර්ෂ 16 දක්වා), පස්වැනි යුගය වර්තමාන යුගය යි. (ක්‍රි: ව: 1600 සිට අද වනතුරු) සොළී රජවරු තන්ජාවූර් රාජධානිය කොට ගෙන රජ කරන කාලයේදී හින්දු ලෝකඩ ප්‍රතිමා ශිල්පය ඉතා උසස් තත්ත්වයකට පැමුණුනේය. තන්ජාවූර් ප්‍රදේශයේ තිබී සොයා ගත් නොයෙක් හින්දු ලෝකඩ රූප ද, දකුණු ඉන්දියාවේ සිද්ධස්ථානවල තිබෙන ලෝකඩ රූපද සසඳ බලන කල මේ පොලොන්නරු හින්දු ලෝකඩ රූප ලංකාවේ සොළී රජවරුන්ගේ කාලයට අයත් යයි සිතිය හැක්කේය. එනම් ක්‍රි: ව: 1000–1070 දක්වා කාලය යි. ත්‍රිකුණාමලයෙන් සොයා ගත් පිළිම තුනින් දෙකක් ඊශ්වර රූපය; අනික පාර්වතියගේය. මේ තුණ කලාව අතින් විශේෂ ස්ථානයක් ගන්නා බව ඒවායේ අංග සම්පූර්ණත්වයෙන් සලකාගත හැක."

මේ තරම් ප්‍රසිද්ධියක් හා වටිනා කමක් ඇත්තාවූ ද, පෙර කෝවිලක් තුබුණු බවට සැකයක් නැත්තාවූ ද මෙම ස්ථානයේ නැවත කෝවිලක් ඉදිකිරීම සඳහා වෛද්‍යාචාර්ය බාලේන්ද්‍ර මහතා දරණ උත්සාහය සාර්ථක කිරීමට ඔබතුමන්ලාගේ සහයෝගය බලාපොරොත්තු වෙමු.

# FORMA
## DO PAGODE DE TRIQVILLIMALE.



திரிகோணமலை ஆலயத்தின் படம். போர்த்துக்கீசர் இதனை
அழிப்பதற்கு முன்னர் வரைந்துவைத்த படம்.

சுந்தரம்ஸ் லிமிட்டெட், 50 குழுவைத்தெரு, கொழும்பு. 6386-51

From ______________________ [illegible]

[illegible] :
[illegible]

[illegible]
CONNECTED CASES

| [illegible] | [illegible] | | [illegible] |
|---|---|---|---|
| | | | |

# திருக்கோணம

குல. சபாந

M. SATK